*இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.iaraindia.com*
**தமிழாய்வுச் சங்கமம் ~ பன்னாட்டு ஆய்விதழ்**
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
பகுதி *VI*, பதிப்பு *17* - ஏப்ரல் - ஜீன் 2019
*Formally UGC Approved Journal (64089), © Author*

# ஏலாதியில் தன்னம்பிக்கை

**முனைவர் இரா. இளவரசு**
இளங்கலைத் தமிழ்த்துறைத் தலைவர்
அய்யநாடார் ஜானகி அம்மாள் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி

***முன்னுரை***

*தமிழ் இலக்கியங்கள் தொடக்க காலம் முதலே தன்னம்பிக்கையை வளர்த்தெடுக்கும் கருத்துக்களை உட்பொதிந்து வந்துள்ளன. தற்காலத்தில் இது பற்றிய சிந்தனை விரிவுபெற்றதால், பல்வேறு அறிஞர்களும் தன்னம்பிக்கையைப் பொது மக்களிடம் குறிப்பாக இளையோரிடம் வளர்த்தெடுக்கும் விதமாகப் பல நூல்களை எழுதி வெளியிட்டு வருவதைக் காண முடிகிறது. எந்தவொரு சமுதாயத்தில் மனிதர்கள் தன்னம்பிக்கைக் குறைவுடையவர்களாக விளங்குகிறார்களோ, அச்சமுதாயத்தில் மூடநம்பிக்கைகளும் மூடப்பழக்கவழக்கங்களும் மிகுதியாகின்றமையை உலக வரலாறு நோக்க அறியலாம். ஒருவன் ஏதேனும் ஒரு செயலுக்காக பிறரை நம்புவது நம்பிக்கை, இது மனிதனுக்கு மனிதன் மீதும், மனிதனுக்குத் தெய்வத்திடத்தும் தோன்றுவது. தன்னம்பிக்கை மனிதனொருவன் தன்னுடைய செயல்களின் மீதும் தன்னுடைய நடத்தையின் மீதும் தான் செல்லும் நெறியினிலும் நம்பிக்கை கொண்டு செயல்படுவது எனலாம். இத்தகைய தன்னம்பிக்கைக் கூறுகள் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான ஏலாதியில் இடம்பெற்றுள்ள தன்மையை ஆய்வதாக இவ்ஆய்வுக் கட்டுரை அமைகிறது.*

**ஏலாதி - நூல் அமைப்பு மற்றும் ஆசிரியர் குறிப்பு**

ஏலம், இலவங்கம், பட்டை, சிறுநாவற்பூ, சுக்கு, மிளகு, திப்பிலி என்னும் ஆறும் சேர்ந்த மருந்துக் கூட்டுக்கு ஏலாதி என்று பெயர். உடம்பிற்கு நன்மை பயக்கும். அதனைப் போன்று மனித உயிர்களுக்கு நன்மை விளைக்கும் ஆறு பொருள்கள் ஒவ்வொரு செய்யுளிலும் அமைத்துப் பாடப்பட்டுள்ள இந்நூலில் மொத்தம் எண்பது வெண்பாக்கள் அமைந்துள்ளன. இந்நூலாசிரியர் கணிமேதாவியார் என்றும் இவரது காலம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு என்றும், இவர் சமண சமயத்தவர் என்றும் குறிப்பிடுகின்றனர். மேலும் திணைமாலை நூற்றைம்பது இவரால் இயற்றப்பட்டதாகச் சுட்டப்படுகிறது. திணைமாலை நூற்றைம்பது நூலின் பாயிரம்,

**"முனிந்தார் முனிவொழியச் செய்யுட்கண் முத்துக்**
**கனிந்தார் களவியற் கொள்கைக் - கணிந்தா**
**ரிணைமாலை யீடிலா வின்றமிழால் யாத்த**
**திணைமாலை கைவரத் தேர்ந்து"**

**(திணைமாலை நூற்றைம்பது, பாயிரம் - 154)**

என்று அமைகிறது. அகப்பொருளாகிய களவியல் கொள்கையினை வெறுத்தவர்களின் வெறுப்பு விலகும்படியாகவே திணைமாலை நூற்றைம்பதிணை ஆராய்ந்து படைத்தார் கணிமேதாவியார் என்கிறது மேற்கண்ட பாயிரம். இங்குச் சுட்டப்படும் முனிந்தார் என்னும் சொல் சமணர்களையே சுட்டுவதாக ஆய்வாளர்கள் சுட்டுகின்றனர். அவ்வாறு இருக்க மேற்கண்ட இருநூல்களையும் இயற்றியவர் ஒருவரே என்பது சற்றும் பொருத்தமுடையதாக அமையவில்லை. 'ஏலாதி நூலின் ஆசிரியரைப் பற்றிய சிறப்புப் பாயிரம் கணிமேதை செய்தான் கலந்து என்று மட்டுமே குறிப்பிடுகின்றது. பிற கருத்துக்களையும் திணைமாலை நூற்றைம்பது அக நேர்த்தியையும் கவனிக்கும் போது திணைமாலை நூற்றைம்பது அகநேர்த்தியையும் கவனிக்கும் போது திணைமாலை நூற்றைம்பதைச் செய்த நூலாசிரியர் வேறானவர் அவர் பெயரே கணிமேதாவியார், ஏலாதி எழுதிய நூலாசிரியர் கணிமேதை என்றே இருத்தல் வேண்டும்' (க.ப.அறவாணன், புதிய பார்வையில் பதினெண்கீழ்க்கணக்கு, ஏலாதி, ப. 44) என்னும் கருத்து சிந்தித்தற்குரியது.

**தன்னம்பிக்கையின் பல்வேறு பரிமாணங்கள்**

எவனொருவன் தன்னை உணர்ந்தவனாக உள்ளானோ, தன் புலன்களை ஆளுகை செய்பவனாக இருக்கின்றானோ, உள்ளத்திலே உறுதி கொண்டுள்ளானோ அவனிடம் தன்னம்பிக்கை தானே குடிகொள்ளும், பரம்பொருளிடம் எனக்கு அது வேண்டும், இது வேண்டும் எனக் கேட்பவர்களுக்கிடையில் பாரதியார்,

**“அறிவிலே தெளிவு, நெஞ்சிலே யுறுதி**
**அகத்திலே யன்பினோர் வெள்ளம்**
**பொறிக ளின்மீது தனியர சாணை**
**பொழுதெலாம் நினதுபே ரருளின்**
**நெறியிலே நாட்டம் கரும யோகத்தி**
**நிலைத்திட லென்றிவை யருளாய்”**
**(பாரதியார், சுயசரிதை, பா.49)**

எனக் கேட்பது அவரது தனித்துவத்தைக் காட்டுகிறது. எவனொருவன் தான் செய்யும் செயல்களைத் திட்டமிட்டுச் செய்கிறானோ அவன் எடுத்த அனைத்துக் காரியங்களிலும் மனவுறுதியுடன் செயல்பட்டு வெற்றி பெறுவான். இதனை வள்ளுவர்,

**“வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்**
**மற்றைய எல்லாம் பிற”**
**(குறள்., 661)**

என்கிறார். தன்னம்பிக்கை என்பது ஒருவரின் தலைமைப் பண்பு, ஆளுமைப் பண்பு பிறர்க்கு உதவும் மனப்பாங்கு, நல்ல நட்புரிமை பாராட்டுவது, தனிமனித வாழ்வில் ஒழுக்கத்தைக் கடைபிடிப்பது, நேர்மையாகச் செயல்படுவது கல்வியில் மேன்மைபெற்று விளங்குவது போன்ற கூறுகளின் வழி உருவாவது ஆகும். மேற்கண்ட கூறுகளை ஏலாதி நூலில் பரக்கக் காண முடிகிறது.

**தலைமைப் பண்பு**

தனிமனின் ஒருவன் சமூகத்தில் தனித்த அடையாளத்துடன் திகழ்வதற்கு அவனிடம் உருவாகும் சில தனித்த சிறப்புப் பண்புகள் தான் காரணமாக அமைகின்றன. சாதாரண மனிதனும் நாடாளும் தலைவனாக மாறுவதை தற்காலத்தில் பரவலாக உலகம் முழுதும் காண்கிறோம். ஆனால், மன்னர்கள் ஆட்சியில் மரபுரிமை அடிப்படையில் ஆட்சி, அதிகாரத்தைப் பெற்ற காலகட்டத்தில் சில குறிப்பிட்ட பண்புகளைப் பெற்றவன் மண்ணாளும் மன்னனாக முடியும் என்று கூறும் ஏலாதிப் பாடல் வியப்பை அளிக்கிறது. அறிவின் மிக்க சான்றோரின் அறிவுரைகளைப் போற்றி அவற்றின் படி தவறாமல் ஒழுகுபவன், தம்முடைய பணியாளர்கள் மீது விருப்பு, வெறுப்பின்றியும், வஞ்சகர் சொல்லும் சொற்களை நம்பாமலும், அவர்களுடன் நட்புக் கொள்ளாமலும் வாழ்க்கையின் பயனை ஆராய்ந்துணர்ந்தும் விருந்தினர் முதலியவர்களுடன் உள்ளதை

 ISSN: 2320-3412(P), 2349-1639(O)

பகிர்ந்துண்பவன் கட்டாயம் மண்ணாளும் அரசன் ஆவான் என்று ஆசிரியர் கூறுவதை,

**“பெரியார் சொற் பேணிப் பிறழாது நின்று**
**பரியா வடியார்ப் பறியான் - கரியார்சொல்**
**தேறா னியையான் தெளிந்தடிசி லீத்துண்பான்**
**மாறான்மண் ணாளுமா மற்று”**
**(ஏலாதி, பா. 47)**

என்ற பாடல் வழி அறியலாம். மேற்கண்ட பாடல் கற்றவன், கற்றபடி நிற்பவன் தலைவனாவான் என்ற பேருண்மையை வெளிப்படுத்துவதைக் காணமுடிகின்றது.

**ஆளுமைப்பண்பு**

ஆளுமைப் பண்பு (Personality) என்பது ஒருவரின் ஒட்டுமொத்த செயல்பாடுகளின் வழி வெளிப்படுவது ஆகும். சமுதாயம் எதையெல்லாம் தவறு எனக் கருதுகின்றதோ அவற்றையெல்லாம் ஒருவன் செய்யாது விட்டாலே போதும் அவன் அச்சமூகத்தில் பெரிதும் மதிக்கப்படுவான். புறவேடங்களால் எந்தப் பயனும் இல்லை என்பதை வள்ளுவர்,

**“மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்**
**பழித்தது ஒழித்து விடின்”**
**(குறள்., 280)**

என்ற குறளில் பதிவு செய்துள்ளதைக் காணலாம்.

பொய் சொல்லாதவன், எவரையும் இகழாதவன், ஒருவரையும் புறம்பழித்து இழிவாகப் பேசாதவன், பிறர் துன்பத்தை நீக்கும் பொருட்டு நடந்த உண்மையைச் சொல்லாதவன், தன்னிடம் பொதிந்துள்ள இரகசியங்களை வெளிப்படுத்தாதவன், உற்ற நண்பனிடத்தும் தனது வறுமையை வெளிப்படுத்தாதவன் இம்மண்ணுலகை விட்டு நீங்கி, மேலுலகில் உள்ள தேவர்களுக்குத் தலைவன் ஆவான் என்பதை ஆசிரியர்,

**“பொய்யுரையான் வையான் புறங்கூறான் யாவரையும்**
**மெய்யுரையா னுள்ளனவும் விட்டுரையான் - எய்யுரையான்**
**கூந்தன்மயி லன்னாய்! குழீஇயவான் விண்ணோர்க்கு**
**வேந்தனா மிவ்வுலகம் விட்டு”**
**(ஏலாதி, பா. 33)**

என்ற பாடல் வழி எடுத்துப்பதைக் காணமுடிகின்றது. தனித்த ஆளுமைப் பண்புகளைக் கொண்டிலங்கும் ஒருவன் விண்ணவர் தலைவனாவான் என்ற ஆசிரியரின் கூற்று மனித ஆளுமையின் சிறப்பினை விளக்குவதாக அமைவதைக் காணமுடிகின்றது.

**தனிமனித ஒழுக்கம்**

தனிமனித ஒழுக்கமே சமூக ஒழுக்கமாகப் பரிணமிக்கிறது. தனிமனிதன் வாழ்வில் ஒழுக்கத்தையும் தூய்மையையும் பேணும் போது அவன் சமூகத்தால் பெரிதும் மதிக்கப்படுவான். அதுமட்டுமின்றி ஒழுக்கம் காரணமாக அவனது தன்னம்பிக்கையின் அளவும் உயரும். இன்றைய நடப்புச் சமூகத்தில் நிகழும் கொலை, கொள்ளை போன்ற வன்செயல்களும், முறையற்ற பாலுறவு, வன்சொற்கள் பேசுதல் போன்ற ஒழுக்கக் கேடுகளும் ஏலாதி தோன்றிய காலத்திலும் அதிக அளவில் இருந்திருக்க வேண்டும். எனவே தான் பெரியவன் என மதிக்கப்படுபவன் கொலை போன்ற பாதகச் செயல்களைச் செய்யாதவனாகவும், பிறர் செய்வதை விரும்பாதவனாகவும், பொய் சொல்லாதவனாகவும், பிறன் மனைவியின் மேல் உரிமை கொள்ள விரும்பாதவனாகவும், கீழ் மக்களின் கூட்டத்தோடு கூடாதவனாகவும் பிறர் பேசும் மறைவானப் பேச்சுக்களைக் கேளாதவனாகவும் தீய சொற்களைப் பேசாதவனாகவும் விளங்க வேண்டும் என்கிறார் ஆசிரியர். இதனை,

**“கொல்லான் கொலைபுரியான் பொய்யான் பிறர்மனைமேல்**
**செல்லான் சிறியா ரினஞ்சேரான் - சொல்லும்**
**மறையிற் செவியிலன் றீச்சொற்கண் மூங்கை**
**இறையிற் பெரியாற் கிவை”**
**(ஏலாதி, பா. 19)**

என்ற பாடல் வழி அறியமுடிகின்றது. எனவே தனிமனித ஒழுக்கம் பேணுதலே சிறந்த சமூகமதிப்பைப் பெற்றுத்தரும் என்பதை மேற்கண்ட பாடல் எடுத்தியம்புவதைக் காணலாம்.

**மனவலிமை வேண்டுதல்**

எந்தவொரு செயலையும்

வெற்றியாக்குவதற்கு இன்றியமையாதது மனவுறுதியாகும். மனதில் வலிமையும் உறுதியும் உடையவனே எடுத்த செயலை எவ்விதத் தொய்வுமின்றி முடிக்க முடியும். அது இல்லாதவர்கள் பெயரளவிலேயே காரியங்களைச் செய்வர். அவர்களால் எந்தவித சாதனையையும் செய்ய இயலாது. ஆக இடைவிடா முயற்சியுடைய அறிவுடையோரே நினைத்ததை நினைத்த வண்ணம் செயல்படுத்த முடியும். ஒருவன் இறப்பது எளிமையானது. ஆனால் கல்வி, கேள்விகளில் சிறத்தல் அரிதானது, மணவாழ்வில் ஈடுபடுவது எளிது, ஆனால், அதில் மெய்மை போற்றல் அரிது, துறவு மேற்கொள்ளல் எளிது. ஆனால் அத்துறவில் நீளநிலைத்தல் அரிது, சொல்லுதல் எவருக்கும் எளிது, ஆனால் சொல்லிய வண்ணம் செயலாற்றுவது அரிது என்கிறது ஏலாதி. இதனை,

**"சாவ தெளிதரிது சான்றாண்மை நல்லது**
**மேவ லெளிதரிது மெய்போற்றல் - ஆவதன்கண்**
**சேற லெளிது நிலையாது தெள்ளியராய்**
**வேற லெளிதரிது சொல்"**
**(ஏலாதி, பா. 39)**

என்ற பாடல் வழி அறியலாம். எந்தவொரு செயலையும் இடைவிடாது செய்யத்தக்க மனவலிமை அறிவுடையயோருக்கே உரியது என்பதை மேற்கண்ட பாடல் வழி அறியலாம்.

**கல்வியழகு**

மனிதன் பிறக்கும் போதே அனைத்தையும் தெரிந்து கொண்டு பிறப்பதில்லை. வாழ்வின் பல படிநிலைகளில் ஒவ்வொன்றாகக் கற்றுக் கொள்கிறான். அனைத்தையும் மனிதன் அனுபவித்தே கற்றுக் கொள்வது என்பது இயலாத ஒன்றாகும். அதற்கு அவனது ஆயுள்காலம் போதாது. அதனால் தான் முன்னோரின் பட்டறிவினை, ஆய்ந்தறிந்த வாழ்வியல் உண்மைகளை கல்வியின் வழி கற்க வேண்டியவர்களாகின்றோம், ஒருவனுடைய தன்னம்பிக்கையை வளர்த்தெடுப்பது அவனது உடல் சார்ந்த அழகுகளோ அல்லது செல்வ வளமையோ அல்ல அவனது கல்வியின் அழகே என ஏலாதி சுட்டுவதை,

**"இடைவனப்புந் தோள்வனப்பு மீடின் வனப்பும்**
**நடைவனப்பு நாணின் வனப்பும் - புடைசால்**
**கழுத்தின் வனப்பும் வனப்பல்ல வெண்ணோ**
**டெழுத்தின் வனப்பே வனப்பு"** **(ஏலாதி, பா. 74)**

என்ற பாடல் வழி அறியமுடிகிறது. ஒருவன் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்குதலே அவனுக்குரிய சிறந்த அழகு என்னும் இச்சிந்தனை வியத்தற்குரியதாக உள்ளதைக் காணமுடிகிறது.

**வாழ்வியல் உண்மையுணர்த்தல்**

இவ்வுலக வாழ்வு நிலையாமை உடையது என்ற எண்ணம் மனித மனத்தில் பதிந்தால் தான், மனிதன் வாழும் நாளைச் சரியாகத் திட்டமிட்டு வாழ்வான் என்பதால் தான் சங்ககாலம் தொடங்கி நிலையாமைத் தன்மை வலியுறுத்தப்பட்டு வருகிறது. இதனையறிந்தே வள்ளுவரும் நிலையாமை குறித்து ஒரு அதிகாரம் வகுத்துள்ளதைக் காணமுடிகின்றது.

**"நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை என்னும்**
**பெருமை உடைத்துஇவ் வுலகு"** **(குறள்., 336)**

என்ற குறள் வழி நிலையாமையை பெருமைமிக்க ஒரு பொருள் என வள்ளுவம் சுட்டுவதனைக் காணலாம். ஏலாதியும் வாழ்க்கை நிலையாமையை எடுத்துக் கூறுமுகமாக, இளம்பருவம் நிலைபெறாது விரைவில் கழிந்துபோகும், வயது மூப்பும், மூப்பு காரணமாகப் பிணியும் வந்து சேரும், செல்வ வளமும் உடல் வலிமையும் குறையும். எனவே குறுகிய கால வாழ்க்கை எல்லைக்குள் நல்ல செயல்களைச் செய்து ஒழுகுதல் வேண்டும். அதுவே வீட்டின்பத்தைக் கொடுக்கும் எனக் கூறுவதை,

**"இளமை கழியும் பிணிமூப் பியையும்**
**வளமை வலியிவை வாடும் - உளதாளால்**

**பாடே புரியாது பால்போலுஞ் சொல்லினாய்**
**வீடே புரிதல் விதி"**
**(ஏலாதி, பா. 21)**

என்ற பாடல் வழி அறியமுடிகிறது. எவனொருவன் தன்னை நாடி வரும் புதியவர்களுக்கு (விருந்தினர்) எல்லாம் இனிய சொற்களைக் கூறி முகமலர்ச்சியோடும் உள்ளன்போடும் வரவேற்று அவர்களுக்குத் தங்குமிடமும் ஆடை அணிகளும் உறைவிடமும் கொடுத்து உபசரிக்கின்றானோ அவனை விண்ணோர் விருந்தினராக ஏற்றுக் கொள்வர் என்பதனை,

**"இன்சொ லளாவ லடமின்தான் யாவர்க்கும்**
**வன்சொற் களைந்து வகுப்பானேல் - மென்சொல்**
**முருந்தேய்க்கு முட்போ லெயிற்றினாய் நாளும்**
**விருந்தேற்பர் விண்ணோர் விரைந்து" (ஏலாதி, பா. 7)**

என்ற பாடல் வழியாக ஆசிரியர் சுட்டுகிறார். மேற்கண்ட பாடல் பிறருக்கு உதவி வாழ்வதே வீடுபேற்றிற்குரிய வழிகளுள் முதன்மையானது எனக் கூறுவதனை அறியமுடிகிறது.

**பொது சேவை புரியும் குணம்**

தனக்காக மட்டுமே வாழ்பவன் சமூகத்தால் ஒருநாளும் மதிக்கப்பட மாட்டான். 'செல்வத்துப் பயனே ஈதல்' என்பார் வள்ளுவர். எனவே, ஒருவன் தன்னலம் பாராது செய்யும் பொதுத் தொண்டே அவனுக்கு தனித்த பெருமையையும் சமூக மதிப்பையும் பெற்றுத்தரும். நாட்டில் நீர்வளம் பெருகச் செய்தல், வழியிடைச் செல்வோர் தங்குதற்குரிய குடில்களை அமைத்துத் தருதல், தண்ணீர்ப் பந்தல் வைத்தல், நல்ல மண்டபங்கள் கட்டுதல் முதலான பொதுத் தொண்டு புரிபவன் இல்லற வாழ்வில் சிறப்புடன் விளங்குவான் என்பதை,

**"உண்ணீர் வளங்குளங் கூவல் வழிப்புரை**
**தண்ணீரே லம்பலத்தான் பாற்படுத்தான் - பண்ணீர**
**பாடலோ டாடல் பயின்றுயர் செல்வனாய்க்**
**கூடலோ டூடலுளான் கூர்ந்து"**
**(ஏலாதி, பா. 51)**

என்ற பாடல் வழி ஏலாதி விளக்குகிறது. பொதுப் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு உழைக்கும் ஒருவனை ஊக்குவிக்கும் மேற்கண்ட பாடல் என்றைக்கும் பொருந்துவதாக அமைவதைக் காணமுடிகிறது.

**முடிவுரை**

ஏலாதி நூல் தோற்றம் பெற்ற காலம் மன்னராட்சி நிலவிய காலம் ஆகும். 'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' என்ற கருத்தாக்கம் நிலவிய காலகட்டத்தில் தனிமனித முன்னேற்றம், தன்னம்பிக்கை போன்றவை பற்றிய சிந்தனைகளுக்கு வாய்ப்பில்லை எனலாம். எனினும் ஒரு மனிதன் எவ்வகையான குணநலன்களைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பது பற்றிய சிந்தனைகளை ஏலாதி முன்வைக்கிறது. தன்னம்பிக்கை உள்ளவனாக ஒருவன் திகழ வேண்டுமானால், அவனிடம் கல்வியறிவு, தலைமைப் பண்பு, ஆளுமைப் பண்பு, நல்லொழுக்கம், மனவலிமை, வாழ்க்கை பற்றிய புரிதல், பொதுத் தொண்டு புரியும் குணம் ஆகியவை இருக்க வேண்டும். மெற்கண்ட தன்னம்பிக்கையினை உருவாக்கும் பண்புகள் குறித்த பதிவுகள் ஏலாதியில் நிறைந்திருப்பதைக் காணமுடிகிறது.